DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.740/2024**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | செந்தில்குமார் |
| Father Name | : | விருமாண்டி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.12.2025.
( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது எஸ் எஸ் காலனி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2024ம் தேதி காலை 07.30 மணி விராட்டி பத்து, தாலுகா அலுவலகம் அருகே சார்பு ஆய்வாளர் **சாட்சி எண்.6** திலீபன், நான் மற்றும் தலைமை காவலர் **அ.சா.1** வினோத்குமார் மற்றும் தலைமை காவலர் **சாட்சி எண்.3** பிரபாகரன் ஆகியோர்கள் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். அப்போது மதுரையில் இருந்து ஒரு ஆட்டோ வந்தது அதனை சோதனை செய்த போது, அதில் வெள்ளை சாக்குமூட்டைகள் நான்கு இருந்தது. அதனை சந்தேகப்பட்டு திறந்துபார்த்த போது, அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் புகையிலை, கூல்லிப் புகையிலை மற்றும் விமல் பாக்கு, விஒன் புகையிலை இருந்தது. நாங்கள் எதிரிகளிடம் விசாரித்த போது பெங்களூரில் இருந்த வாங்கி அதனை DTDC கொரியர் மூலம் மதுரைக்கு அனுப்பி அங்கிருந்து பெற்று கொண்டு செல்லம்பட்டி ஊருக்கு கொண்டு செல்லவதாக சொன்னார்கள். பிறகு நானும், தலைமை காவலர் **சாட்சி எண்.3** பிரபாகரன் மற்றும் சார்பு ஆய்வாளர் **சாட்சி எண்6** திலீபன் ஆகியோர்கள் மேற்படி பொருட்களையும் ஆட்டோ வாகனத்தையும் காவல்நிலையத்திற்கு கொண்டு

வந்தார்கள். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

எனக்கு காவல்துறையில் 15 வருட அனுபவம் உள்ளது. எனக்கு வாகன தணிக்கை மற்றும் பந்தபஸ்து பணிகளில் அனுபவம் உள்ளது. எனக்கு அன்றாட பணிகள் சம்மந்தமாக பாக்கெட் டைரி உள்ளது என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை அன்றாட பணி முடித்து ஆய்வாளரிடமோ அல்லது சார்பு ஆய்வாளரிடமோ தினமும் கையொப்பம் பெற வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ரோந்து பணி சம்மந்தமாக என்னுடைய பாக்கெட்டைரியில் குறித்து வைத்துள்ளேன். அதனை என்னுடைய விசாரணையின் போது சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் எஸ் எஸ் காலனி காவல்நிலையத்தில் தனிபடை போலீஸார் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 200 மீட்டர் தொலைவில் தான் எஸ் எஸ் காலனி காவல்நிலைய வாகன சோதனை சாவடி உள்ளது என்றால், சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லபடும் இடத்தின் அருகே உள்ள தாலுகா அலுவகத்தின் வாசலில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, ஏனென்றால் தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கில்லை. தாலுகா அலுவலகத்தில் காவலாளி இருப்பார் என்றால் சரிதான், ஆனால் அந்த சமயத்தில் இல்லை. செல்லம்பட்டியில் இருந்து நாகமலைபுதுக்கோட்டையில் இருந்து வரும் வாகனம் மேற்படி சோதனை சாவடியை தாண்டி தான் வரும் என்றால் சரிதான். மேற்படி வந்து செல்லும் வாகனங்கள் எங்கள் சோதனை சாவடி கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் ஒரு கையொப்பம் ஒரு

பேனாவினாலும், மற்றொரு கையொப்பம் இன்னொரு பேனாவினாலும் போடப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் சான்றுபொருட்களை என் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் இரசாயன பரிசோதனைக்கு என் முன்பு எடுக்கவில்லை. கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் பொருட்கள் அடங்கிய மூட்டைகளில் போலீஸ் பட்டன்சீல் வைக்கப்பட்டது. அந்த பட்டன் சீல் காவல்நிலையத்தின் பட்டன் சீல் ஆகும். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விததில் எவ்விதமான வாகன சோதனையிலும் ஈடுபடவில்லை என்றும் உயர் அதிகாரிகளின் வேண்டுதலுக்கிணங்க ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கு எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

S/d - S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,
IV Additional District and Sessions Judge, Madurai.